MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

Creating Compositions and the Performance: An Action-Centric Study Based on the Konesar Thalapuranam Songs

Mr.S.Chandrakumar[1], Ms.V.E.N.Gnanabarathi[2]

Senior Lecturer[1], Master of Arts Student[2], Department of Fine Arts, Eastern University, Sri Lanka.

Manuscript ID : **MT55A0024**

Volume : **2**

Issue : **2**

Month : **June**

Year : **2022**

Received: 25.02.2022

Revised: 29.03.2022

Accepted: 30.06.2022

Published: 30.06.2022

Pages : 15 - 26

ABSTRACT:

Bharatanatyam which is considered as the classical dance of the Tamil people is a performance art form. Its dance features are presented as concert arrangements, also called compositions. “Adavu” connected with preliminary practices cannot be directly applied as performances. The performance will be set up with the creation of compositions that comprise Jathi (movement of feet conformity with rhythm) which is combination of Adavu. Even though those are abundance in Bharatanatyam, have not been classified as special compositions for sacred shrines. It was analysed about how the Thalapuranangal songs connected to the sacred shrines can be manipulated for the songs that are featured in the compositions, when creating the performances for those sacred shrines. Compositions such as Pushpanjali, Kavuththuvam, Keerthanai, Thillana and Kummi were created from the ancient Thirukoneswarar temple Thalapuranangal songs and these compositions were performed on 13.04.2021 during the Temple festival at the same place. This study is focused on the background of above performance art form, need of compositions, the creation of compositions and its results.

KEYWORDS:

Compositions, performances, Thalapuranangal (Purana on a sacred shrine), the Classical dance of Tamil people

REFERENCES :

1. Vadivelu.E., 1995, Antiquity & Solidity of Thirukoneswaram, Jeyshan Printers, Colombo – 13
2. Pathmanaaban.S., 2006, Sril Lanka Tamil Charters, Uniarts PVT, Colombo – 13
3. Akilesapillai.V. 2000, Festival of Thirukoneswaram, Thathuvagnana Printers, Colombo – 2.
4. Akilesapillai.V. 2000, Festival of Thirukoneswaram, Thathuvagnana thavasaalai Printers, Colombo – 2.
5. Chandrakumar.S. on Elam’s Folk Dance Art Study, Karai S.Sundarampillai’s theatre folk of Northern Sri Lankan and Prof.S.Maunaguru’s Batticaloa Traditional way of drama plays – A Comparative Study, Submitted in 2014 for Master of Philosophy Degree in Department of Fine Arts.

உருப்படி உருவாக்குதலும் அதன் ஆற்றுகையும்: கோணேசர் தலபுராணப்பாக்களை மையப்படுத்திய செயல்மைய ஆய்வு

திரு.சு.சந்திரகுமார்[1], செல்வி.வி.இ.நே.ஞானபாரதி[2]

முதுநிலை விரிவுரையாளர்[1], முதுகலைக் கற்கை மாணவி[2],நுண்கலைத்துறை,

கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை

கட்டுரைச் சுருக்கம்

தமிழரின் சாஸ்திரிய நடனமாகக் கருதப்படும் பரதநாட்டியம் ஓர் ஆற்றுகைக் கலை வடிவமாகும். இதனை ஆற்றுகை செய்யும்போது அதன் ஆடல் அம்சங்களை பரதநாட்டியக் கச்சேரி அமைப்புகள் என வழங்குவர். தற்காலத்தில் ஆடலுக்குரிய அம்சங்களைப் உருப்படிகள் எனவும் அழைப்பதுண்டு. வெறுமனே ஆரம்ப பயிற்சிகளுக்கான அடவுகளை ஆற்றுகைகளாக பிரயோகிக்க இயலாது. ஜதிகளும், பாடல்களும், சொற்கட்டுக்களும் கொண்ட உருப்படிகளை அமைத்து அதற்கு ஏற்ப அடவுகளைப் பிரயோகிக்கும் போது அவை ஆற்றுகையாக அமையப்பெறும்.

இவ்வாறான ஆற்றுகைகளுக்குரிய உருப்படிகள் பரதநாட்டியத்தில் ஏராளமாகக் காணப்படினும், தலங்களுக்கான சிறப்பு உருப்படிகளாக அவை வகுக்கப்படவில்லை. தலங்களிற்கான ஆற்றுகைகளை உருவாக்கும் போது உருப்படிகளில் இடம்பெறும் பாடல்களுக்காக அத்தலத்திற்கே உரிய தலபுராணங்களை எவ்விதமாகக் கையாள இயலும் என்பதை ஆராய்ந்து; தொன்மையான திருக்கோணேஸ்வரர் ஆலயத் தலபுராணங்களில் இருந்து ஆடல் உருப்படிகளான புஷ்பாஞ்சலி, கவுத்துவம், கீர்த்தனை, தில்லானா, கும்மி ஆகியவை உருவாக்கப்பட்டு அவை அத்தலத்திலேயே தேர்த்திருவிழாவின் போது தேர் வீதியில் 13.04.2021 அன்று ஆற்றுகை செய்யப்பட்டது.

இவ் ஆற்றுகை நிகழ்வின் பின்னணி, உருப்படிகளின் தேவை, உருப்படிகளின் உருவாக்கம், ஆற்றுகை அனுபவம் மற்றும் அதன் விளைவுகளை மையப்படுத்தியதாக இவ் ஆய்வு அமைகின்றது.

கருச்சொற்கள்

உருப்படிகள், ஆற்றுகைகள், தலபுராணங்கள், தமிழரின் சாஸ்திரிய நடனம்.

முன்னுரை

திருக்கோணேஸ்வரர் தலம் தொன்மை மிக்கதான இந்துக்களின் கோயிலாகக் காணப்படுகிறது. இத்தலம் பல புராண வரலாறுகளிலும் பேசப்பட்டுள்ளது. இத்தலம் மேல் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னர் பல புராணப்பாடல்களும் எழுதப்பட்டுள்ளது. கோயில்களிலே ஆடல்கள் இடம்பெற்ற வரலாறுகளின்

அடிப்படையில் இத்தலத்திலும் அவ்வாறானதொரு ஆடல்முறைமை இருந்துள்ளமை பற்றி புராணங்கள் எடுத்துக்கூறுகின்றன. காலத்தின் மாறுதல்களால் அங்கு பேணி வளர்க்கப்பட்ட ஆடல்முறை கைவிடப்பட்டு அழிவடைந்துள்ளமையை ஆய்வின் மூலம் அறிய முடிகிறது. இதனை மீளுருவாக்கம் செய்தலே இவ்வாய்வாகும். புதிதாக ஆடலுக்குரிய பாடல்களை இயற்றாது திருக்கோணேஸ்வரர் தலத்தின்மேல் பாடப்பட்ட தல புராணங்களிலிருந்து பாடல்களைத் தெரிவுசெய்து அவற்றை ஆடலுக்குரிய உருப்படிகளாக இயற்றி, அதனை ஆற்றுகை செய்தலே இவ்வாய்வின் நோக்கமாகும். குறிப்பிட்ட ஆற்றுகையானது 13.04.2021 அன்று திருக்கோணேஸ்வரர் திருத்தலத்தின் தேர்த்திருவிழாவின் போது இடம்பெற்றது. இவ்வாற்றுகையின் உருவாக்கமும், விளைவுகளும், சவால்களும், பின்னிலைப்பாடுகளும் இவ்ஆய்வில் ஆராயப்பட்டுள்ளன.

ஆற்றுகைக் கலையும் பரதமும்

கலை என்பது மனித அழகியலுடன் சமூக பண்பாட்டு அம்சங்களை தன்னுள் செலுத்தி, அவற்றை வெளிப்படுத்தி நிற்கும். கலைகளுள் ஆற்றுகைக் கலை என்பது முக்கியமானதாகக் காணப்படுகின்றது. ஆற்றுகைக் கலைகளின் மூலம் வெளிப்படுத்தப்படும் விடயங்களும், கருப்பொருளும் பார்வையாளரை நேரடியாகச் சென்றடையக் கூடியன. ஆற்றுகைக் கலைகள் ரச உணர்வைப் பார்வையாளரிடம் கணப்பொழுதில் தோற்றுவிக்கும். ஆற்றுகைக் கலைகளாக சங்கீதம், நடனம், நாடகம் என்பவற்றை எடுத்துக்காட்டலாம். இது பொழுதுபோக்காக ரசிக்கும் கலை என்பதைத் தாண்டி ஏதோ ஒருவகையில் ஆடலுடன் பக்தியும், சமயமும் இணைந்து நோக்கப்படுகிறது. தமிழர் சாஸ்திரீய நடனம் என்று கூறப்படும் பரதநாட்டியம் என்னும் ஆடற்கலை இத்தகைய ஆற்றுகைக் கலையே.

திருக்கோணேஸ்வரர் தொன்மையும்; பாடல் பின்னணியும்

வரலாறு சார்ந்து நோக்கும்போது தட்சிண கைலாயம் எனவும் மச்சேசுரம் எனவும் இத்தலம் பெயர் பெற்றுள்ளது. இலங்கையை ஆண்ட இராவணனின் வரலாற்றுடன் திருக்கோணேஸ்வரம் பெரிதும் தொடர்பு படுத்தப்படுகின்றது. தொன்மை வாய்ந்த இத்தலம் மீது திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், பட்டினத்துப்பிள்ளை, சேக்கிழார், அருணகிரிநாதர் ஆகியோர் தேவாரங்கள், பதிகங்கள், திருப்புகழ்கள் ஆகியவற்றைப் பாடியுள்ளனர். இவர்கள் வாழ்ந்த காலப்பகுதி கி.பி 7ம் நூற்றாண்டாகக்

கருதப்படுவதால் இவ்வாலயம் அதற்கு முன்பிருந்தே சிறப்பு பெற்றுள்ளமையை அறியமுடிகிறது. புவியியல் சார்ந்து நோக்கும்போது குமரிக் கண்டம் எனப்பட்ட ஒன்றிணைந்த கண்டங்களாக பூமி இருக்கும்போதே இத்தலம் இருந்திருக்க வேண்டும் என ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. தொடர்ச்சியான கடல்கோளினால்

பழமையான இக்கோயில் கடலுக்கு அடியில் அமிழ்ந்துள்ளது எனவும், இதனை மலையடிவாரத்திலுள்ள கடலினுள் உள்ள கோயில் தளம், தூண்கள், இடிபாடுகள் என்பன நிரூபிக்கின்னறன எனவும் ஆழ்கடல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். (வடிவேல்.இ. 1995, ப-16)

தட்சிண கைலாய புராணம் என்பது திருகோணமலை உள்ளிட்ட இலங்கையில் உள்ள எல்லா தலங்களையும், சரித்திரங்களையும் பற்றிக்கூறும் தலபுராணமாகும். சைவ பண்டிதர் என்னும் குருவின் வேண்டுகோளுக்கு அமைய சமஸ்கிருத மொழியில் இருந்த மச்சேந்திர புராணத்தை தமிழில் செகராசசேகர மகாராசா பாடினார். (பத்மநாதன்.சி., 1995, ப-ஈ) திருக்கோணேஸ்வரர் தலத்திற்குரிய முக்கிய தலபுராணம் தட்சிண கைலாய புராணமாகும். கரைசை பதியில் எழுந்தருளி இருக்கும் சிவபெருமானின் புகழை விரித்துகூறும் வகையில் அமைந்துள்ள நூல் திருக்கரைசைப் புராணம். திருக்கோணேஸ்வரர் தலத்திற்குரிய மற்றுமொரு தலபுராணம் இதுவாகும். இதனைக் கரைசை பதியை அகத்தியத்தாபனம் என்றும் கூறுவர். அகத்தியரே இதனை தாபித்தவர் எனவும் கூறுவர். (துரைசிங்கம்.த. 204, ப-21) திருக்கோணேஸ்வரத்திற்கு மற்றுமொரு தல புராணமாக விளங்குவது திருக்கோணாசல புராணம். இதன் மூலநூல் கோணேசர் கல்வெட்டாகும். கோணேசர் கல்வெட்டிலே இடம்பெற்ற விடயங்களை விரிவுபடுத்தி செய்யுள் நடையில் அமைத்துக் கூறும் புராணமே திருக்கோணாசல புராணம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கர், சுந்தரமூர்த்திநாயனாரின், பட்டினத்துப்பிள்ளை, சேக்கிழார், அருணகிரிநாதர் ஆகியோரும் தத்தம் தேவாரப் பதிகங்களில் இத்தலத்தை சிறப்பித்துள்ளனர்.

கோயிலில் நடனம்

இயற்கையோடு இணைந்து தோன்றிய ஆடல் பிற்காலத்தில் இறைவனோடு தொடர்பு கொண்ட ஆடலாக மாற்றமடைந்து, போயில்களின் வழிபாட்டில் இறைவனை வணங்கும் ஓர் வழிபாட்டு முறையாக மாற்றமடைந்துள்ளது. கோயில் நடனமாக இருந்த ஆடற்கலை சாஸ்திரியமயப்படுத்தப்பட்டது. பின்வந்த படையெடுப்புக்களால் சாஸ்திரியமாக இருந்த நிகழ்ச்சி நிரல் முறை பிற தாக்கங்களால் சாஸ்திரிய நிலையிலிருந்து விடுபடத் தொடங்கி, காலப்போக்கில் கலாச்சார சீர்கேடுகளுக்கான ஆடல் வடிவமாக நோக்கப்பட்டு அனைவராலும் வெறுத்து ஒதுக்கப்பட்டுள்ளது. பின்னாளில் தென்னிந்தியாவில் ஏற்பட்ட நாட்டியம் சார்ந்த மறுமலர்ச்சியினால் இது மீண்டும் வேரூன்ற ஆரம்பித்து காலப்போக்கில் தென்னிந்தியரின் சாஸ்திரிய நடனமான பரதநாட்டியம் என்னும் வடிவோடு தன் செல்வாக்கை நிலை பெறச்செய்துள்ளது.

தலங்களுக்கான உருப்படிகளின் சமகாலத் தேவை

குறித்த சமூகத்தின் பண்பாடுகளை வெளிப்படுத்தி நிற்பதில் அச்சமூகத்தின் கலைகள் முன்னிலைவகிக்கின்றன. சமூகத்தின் வாழ்வியலினை கலையம்சங்களினூடாக இலகுவில் கண்டுகொள்ள முடியும். ஒரு தலத்திற்கான உருப்படிகளை உருவாக்கி, அதனைத் அத்தலத்தின் தேவைக்கேற்ப ஆற்றுகை செய்யும்போது, அவை அத்தலத்திற்கே உரிய ஆடல் மரபாக மாற்றமடையும். இவ்வாறான கலைகள் நிலை பெறும் போது அச்சமூகத்தில் பிற மத, இன கலப்புகள் இடம்பெறுவது குறைவாகக் காணப்படும்.

கோணேசர் தல பாக்களில் உருப்படி உருவாக்கம்

கோணேசர் தல பாக்களில் உருப்படிகளை உருவாக்குவது சாத்தியமா என ஆராய்ந்து அதற்காக தலபுராணங்களை நன்கு அறிந்து, அவற்றை திருகோணமலையில் வசிக்கும் தவத்திரு அகத்தியர் அடிகளாருடன் உருப்படி உருவாக்கம் பற்றிய கலந்துரையாடலில் ஈடுபட்ட பொழுது அடிகளாரும் அதற்கு சாதகமான பதிலையே அளித்திருந்தார். “புராணப்பாடல்களின் கருத்துகளுக்கும், மொழி நடைக்கும் ஏற்ற வகையில் அவற்றினைத் தெரிவு செய்து எமக்கு வேண்டிய உருப்படிகளை உருவாக்கிக் கொள்ள முடியும்” (தவத்திரு அகத்தியர் அடிகளார், வயது-69, 10.01.2021).

தலபுராணங்களைக் கொண்டு முதலில் உருவாக்கப்பட்டது புஷ்பாஞ்சலி ஆகும். அடுத்து உருவாக்கப்பட்டது கவுத்துவம். இது கம்பீரமான ஓர் உருப்படியாகும். இதனுடைய பாக்கள் வர்ணனையுடன் கம்பீரமாகப் பாட வேண்டியதாகும். இதற்குரிய பாக்கள் திருக்கரைசைப்புராணத்தின் கங்கைச்சருக்கத்தில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன. கீர்த்தனைக்காகத் தெரிவு செய்யப்பட்ட செய்யுள்கள் தல புராணங்களில் இருந்து எடுக்கப்படவில்லை. இவை கோணமலை அந்தாதியிலிருந்து பெறப்பட்டவை. தில்லானா என்பது இறுதியாக ஆடப்படும் ஆடல்வகையாகும். சிவனின் அரும் பெரும் செயல்களை வீரத்தேடு விழித்துக்கூறுவதாக தெரிவு செய்யப்பட்ட திருக்கரைசைப்புராணச் செய்யுள் அமைகிறது.

பொதுவாக கும்மி நடனமும், கோலாட்ட நடனமும் வழக்கமான நடன குழுக்களால் ஆற்றுகை செய்யப்படுகிறது. ஆதலினால் கும்மி அல்லது கோலாட்ட பாடல் ஒன்று புராணங்களிலிருந்து பெற முயற்சித்தபோது, திருக்கரைசைப் புராணத்தின் தாபனச்சருக்க செய்யுள்கள் இதற்குப் பொருத்தமானவையாகத் தென்பட்டன. அகத்தியர் வழிபட்ட திருக்கரைசைச் சிவன் அமைந்த நகரின் சிறப்பைக் கூறியதனாலும், தாபனச்சருக்கத்தில் இருந்து செய்யுள்; பெறப்பட்டமையாலும் இயற்றப்பட்ட கும்மிப்பாடலிற்கு “அகத்திய தாபன கும்மி” என தலைப்பிடப்பட்டுள்ளது.,

கோணேசர் தல பாக்களில் உருவாக்கப்பட்ட உருப்படிகள்

புஷ்பாஞ்சலி

தாம் தீம் த, தத் தித் தாம் - தக தாம் தீம் த, தத் தித் தாம்

தாம் த தீம் த தக தாம் த தீம் த தக தாம் த தீம் த தக தத் தித் தாம்

தத் தித் தாம், தத் தித் தாம் - தத்தித் தத் தித் தாம் தத் தித் தாம் - தத்தித்

தகநக தகநக தகநக தகநக தகநக தகநக - தத்தித்தாம்

தத்தித் தகநக ததீங்கிணதொம் தித் ததீங்கிணதொம் தத்தித் ததீங்கிணதொம்

பூமேவு பொன்னிதழ் புனைமுடியும் பகீரதியும் புதுவெண்டிங்கட்

கோமேவு சிறு கொழுந்து மைம்முகமுங் கொழும்பவளங் கொடிகொண் மெய்யும்

மேமேவு விழியுமையா ளிடப்புறமும் பிறவுமா யெம்மு னீங்காத்

தேமேவு பொழிற்கரைசை நாதாந்தப் பேரொளியைச் சிந்தை செய்வாம்

கவுத்துவம்

தீம் தகு தகு ஜொணு தீம் தகு தகு ஜொணு தீம் தகு தகு ஜொணு தீம் தரித்த தாம்

ஆரண முதலே யந்தமே நடுவே யத்தனே சுத்தவான் பொருளே

தீம் தன தன தக தீம் தன தன தக தீம் தன தன தக தீம் தர்த தாம்

நாரணன் முதலோ ரின்னமுங் காணா நக்கனே நாயக மணியே

தீம் தன தன தக தீம் தன தன தக தீம் தன தன தக தீம் தர்த தாம்

தீம் தரித்த தகதன தீம் தரித்த தகதன தீம் தரித்த தகதன தீம் தரித்த தாம்

வாரணி முலையாண் மலைமக ளகலா வாமனே சோமசேகரனே

தாம் தரித்த தனத தாம் தரித்த தனத தாம் தரித்த தனத தத்தரித தனதாம்

சீரணி கடல்சூழ் தென்றிசைக் கோணேச் சிகரிவாழ் தேவனே சரணம்.

தகிட தரிகிட தகிட தரிகிட தகிட தரிகிட தகிட தகிட தகிட தாம்

தகிட தரிகிட தகிட தரிகிட தகிட தரிகிட தக ரித ரித கிணம்

தொம் தகும் தகிட தொம் தகும் தகிட தொம் தகும்
தகிட தொம்தரித கிண

தத் தரிகிட தித் தரிகிட தொம் தரிகிட நம் தரிகிட தத்தித்தா தா ரித தனதின தொம்

தொம் தரித, தனத தொம் தனத, ஜெணுத தொம் தரித, தனத தா, ரித, ரித, ஜெம்

மத்தமு மெருக்கு மிதழியு மறுகும் வன்னியுஞ் செக்கர்வெண் பிறையுஞ்

சுத்தவான் பயந்த பகீரதிப் புனலுஞ் சூடிய சுருதியின் சுவையே

கத்துறு கடலின் கண்ணடையாலங் கவின்மணி கண்டேனே யன்பர்

சித்தவா லயனே தென்றிசைக் கோணேச் சிகரிவாழ் தேவனே சரணம்.

ஆற்றுகை என்பது துறை சார்ந்து அனைவராலும் மேற்கொள்ள கூடியதொன்றாகும். ரசிகரை கவர்ந்ததும், மாற்றத்தை ஏற்படுத்தும், பொதுவில் அனைவராலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதுமாக அமையும் ஆற்றுகைகளே வெற்றிகரமான ஆற்றுகைகளாகும். அவையோர் எனப்படுவோர் பார்வையாளர். இவர்கள் புறநிலையில் ஆற்றுகையோடு தொடர்பு கொள்கின்றனர். அவையோரின் மனநிலையில் மாற்றங்களை அல்லது ரசனையை ஏற்படுத்துதலே ஆற்றுகையின் நோக்கமாகும். ஆற்றுகைகள் அழகியலைக் கொண்டும் காணப்படுகிறது. அத்துடன் “ஆடல், பாடல், சடங்குசார் தன்மையுடன் திறந்தவெளியில் ஆற்றுவதற்கான படைப்புக்களும் உள்ளன. போதனையாகவும், பார்ப்போருக்கு உணர்வைத் தூண்டுவதாகவும் யதார்த்த நிலைப்பட்ட அரங்குகள் காணப்பட்டன” (சந்திரகுமார்.சு., 2004, 135).

திருக்கோணேசர் தல புராணங்களை வைத்து மேற்கொள்ளப்படும் ஆற்றுகையானது அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். காலப்போக்கில் தலஉருப்படியாக அதை மாற்றமடையச் செய்தலே பெரும் நோக்காகும்.

“ஆரம்பத்தில் அனைத்துமே புறக்கணிக்கப்படும், பின் அவற்றின் பெறுமதி உணரப்பட்டு பற்றி எடுக்கப்படும். நம் கடமை செய்து முடிப்பது, அதை பொதுவில் வழங்குவது”

(அபிராமிபற்குணம், வயது-43, 16.02.2021) என்னும் கருத்து நிலையும் உள்ளது. இதன் அடிப்படையில் உருவாக்கப்பட்ட உருப்படிகளுக்கு ஆற்றுகை உருவாக்கம் கொடுக்கப்பட்டது. இதற்கான நெறியாள்கை சுயமாக தனிப்பட்ட முறையில் செய்யப்பட்டது.

குறித்த தினத்தில் ஏற்கனவே ஆற்றுகை செய்யும் இரு குழுக்களும் அதே நடன வகையைத் தெரிவு செய்திருந்தமை அறியப்பட்டது. மூன்றாவதாக ஒரே தேர் வீதியில் கும்மி ஆற்றுகையை செய்யப்படும்போது குறித்த ஆற்றுகை பார்வையாளருக்கு சலிப்பையும், ரசனைக் குறைவையும் ஏற்படுத்தி விடும், இது ஆய்வின் நோக்கத்திலும் பின்னடைவை ஏற்படுத்தும் எனக் கருதி பொருத்தமான வேறு ஆடல்வகை ஒன்றைத் தெரிவு செய்ய நேர்ந்தது. புஷ்பாஞ்சலி ஆற்றுகைக்காகத் தெரிவு செய்யப்பட்டது. புஷ்பாஞ்சலி இறைவனை மலர் தூவி அஞ்சலி செலுத்தும் ஆடல் என்பதால் கோணேசப் பெருமானின் தேர் வீதிக்கு மிகப்பொருத்தமானதாக அமைந்தது.

ஆற்றுகை செய்வதற்கான மாணவர் வளங்கள் அருகாமையில் கிடைக்கப் பெறாமையாலும், அதற்குரிய சாதகமான நிலைமை இன்மையாலும்; தி/சரஸ்வதி வித்தியாலயம், கப்பல் துறை மாணவர்களைக் கொண்டு ஆற்றுகை மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டது. ஆனால், ஒரு ஆற்றுகை என்பது நெறியாளர் உரிய முறையில் நெறிப்படுத்தினும்; பார்வையாளரைக் கவரும் விதத்தில் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அமைய வழிவகுப்பது ஆற்றுகையாளரைப் செய்பவர்களைப் பொறுத்தே அமையும். கப்பல்துறை அதிகஷ்டப் பிரதேசமாகும். அங்குள்ள மாணவர்களின் ஆற்றுகைத் தன்மை பட்டணத்து மாணவர்களுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவானதாகவே இருந்தது. இது மிகுந்த சவால் ஒன்றினை தோற்றுவித்திருந்தது. இருப்பினும் முயற்சித்துப் பார்ப்பதில் தவறில்லை என்ற கருத்துடன் ஆற்றுகையை மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டது.

29.03.2021ம் திகதியிலிருந்து காலை, மாலை என முழு நேரப் பயிற்சி மாணவர்களுடன் மேற்கொள்ளப்பட்டது. ஆற்றுகையின் அவசியமும், ஆற்றுகை நிகழவிருக்கும் இடம் பற்றியும் மாணவர்களுக்கு பொறுமையாகவும், தெளிவாகவும் கூறப்பட்டது. முதல்நாள் ஆரம்பகட்ட உடற்பயிற்சிகள் மூலம் மாணவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு கால் அசைவுகளின் பயிற்சிகளும் வழங்கப்பட்டது. சொற்களுக்கு பயிற்சிகள் வழங்காது எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு பயிற்சிகள் ஆரம்பத்தில் வழங்கப்பட்டன. படிப்படியாக வேகமான ஆடற் பயிற்சிகளும், சொற்கட்டுகளுடன் பயிற்சிகளும் வழங்கப்பட்டது. முதல் இரு நாட்களும் உடல்

அசைவுகளில் சற்று தடுமாற்றத்தை வெளிப்படுத்திய மாணவர்கள் பின்வந்த நாட்களில் அதை பழக்கப்படுத்திக் கொண்டதை அவதானிக்க முடிந்தது. அடிப்படை பயிற்சிகளும் அடவுப் பயிற்சிகளும் படிப்படியாக வழங்கப்பட்டது.

உருப்படியை ஆற்றுகை செய்ய முக்கியமாகத் தேவையானது பாடலின் எழுத்துருவமும், இசையமைப்புமாகும். பாடல் இன்றி எங்குமே ஆடல் இடம் பெற வாய்ப்பில்லை. ஆடல் நுட்பம் தெரிந்த ஒருவராலேயே சிறப்பான ஆடலுக்கு உரிய

பாடல்களை வழங்கவும், பாடலைப் பாடவும் இயலும். இவற்றுக்குரிய பாடல்களை இயற்றியவர் தவத்திரு அகத்தியர் அடிகளார் அவர்கள் ஆவார்.

குறித்த ஆற்றுகையிலும் நெறியாளர் சார்பாகவும், ஆற்றுகை செய்த மாணவர்கள் சார்பாகவும், மாணவர்களின் பெற்றோர்கள் சார்பாகவும் பல சவால்களை காணமுடிகிறது. நெறியாளர் சார்பாக, இவ் ஆற்றுகையை செய்வதற்கான அனுமதி என்பது ஆரம்பத்தில் திருக்கோணேஸ்வரர் தலத்தில் மறுக்கப்பட்ட நிலையில் பல அறிமுகமற்றவர்களின் உதவியை அனுமதிக்காக தனித்தனியே பெறவேண்டியிருந்தது. இது ஆற்றுகைக்குரிய அவசியத்தை அனைவரிடமும் தனிப்பட்ட முறையில் சந்தித்து விளக்க வேண்டிய சூழலை உருவாக்கியது. ஆற்றுகை குறித்த அனுமதி பெறப்பட்ட பின்னர் ஆற்றுகைக்குரிய கலைஞர்களை பெற முடியாத சூழல் சவாலாகக் காணப்பட்டது. இறுதியில் தெரிவு செய்யப்பட்ட கப்பல்துறை பிரதேசம் அதிகஷ்ட பிரதேசம் என்பதால் இப்பிரதேச மக்களிடையே இவ்வாறானதொரு ஆற்றுகை பற்றிய முழுமையான அறிவும் தெளிவும் இறுதிவரை காணப்படாமை ஆற்றுகைக்கு மிகுந்த சவால்களை தோற்றுவித்திருந்தன.

அவர்களுக்கான விளக்கங்கள் தெளிவாக வழங்கப்பட்டு மாணவர்களை தெரிவு செய்த போதும் மாணவர்களின் ஈடுபாடும், ஆற்றுகைத்திறனும் குறைவாகவே காணப்பட்டது. அவர்களை ஆற்றுகைக்கு தயார் படுத்தல் என்பது பெரிய அளவிலான சவாலாகவே காணப்பட்டது. மாணவர்களின் முதலாவது ஆற்றுகை நிகழ்வு இது என்பதால் ஆரம்பத்தில் மாணவர்களிடம் தடுமாற்றமான சூழலைக் காணமுடிந்தது. எனினும், ஆற்றுகைக்கான பயிற்சிமுறை செம்மையாக்கியது.

ஆற்றுகையின் சவால்களும் முக்கியத்துவமும்

இறுதியில் ஆற்றுகைக்கான பயிற்சி நிறைவு செய்யப்பட்ட பின்னர் குறித்த ஆற்றுகை தினத்தன்று காலை 10மணிக்கு ஆற்றுகை நிகழவிருந்த போதும் ஆற்றுகையாளர்கள் காலை 8மணிக்கு தயார் நிலையில் இருத்தல் வேண்டும் என கோயில் சபையினரால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கு முன்னர் ஒப்பனைகள் மற்றும் தயார்படுத்தலுக்காக இரண்டு மணிநேரம் தேவைப்பட்டமையும்,

பாடசாலையிலிருந்து கோயிலுக்கான தூரம் அதிகளவில் இருந்தமையும் மிகுந்த சவாலாகக் காணப்பட்டது. இவ்வாறான சவால்களுக்கு சரியான முறையில் தீர்வுகளைக் கண்டதோடு ஆற்றுகையையும் சரியான முறையில் நிகழ்த்த முடிந்தது.

மாணவர் சார்ந்த சவால்களாக நோக்கும்போது இவற்றைப்பற்றிய முன்னனுபவம் காணப்படாமை மாணவர்களிடையே பய உணர்வை ஏற்படுத்தியிருந்தது. மாணவர்கள் தம் குடும்ப வறுமையை சிந்தித்து நிகழ்வில் பங்கேற்பதை தவிர்த்தனர். “நாங்கள்

பட்டணத்துக்கு பயணம் போனது குறைவு நிகழ்விற்கு அதிகாலை செல்ல வேண்டி இருந்ததால் கஷ்டமாக இருந்தது. ஆனால், ஆசிரியர் முதல் நாள் எம்மை தனது வீட்டிற்கு வேனில் அழைத்து சென்றது எங்களுக்கு இலகுவான சூழ்நிலையை ஏற்படுத்தித் தந்தது" (சுபதாரணியா.க. வயது-13, 15.04.2021).

"நிகழ்வு நடைபெற்ற அன்று ஆடும் போது கால்களை வழமை போல் தட்டி ஆட முடியவில்லை. நாங்கள் பயிற்சி செய்தது நடன அறையின் நிலத்தில் ஆகும். அங்கு ஆடியது மணல் நிலத்தில். அங்கு வழமை போல் ஆட முடியவில்லை" (மானிசா.க. வயது-12, 15.04.2021). "வழமையாக ஆடியதிலும் பார்க்க நிகழ்வு அன்று எங்களைச் சுற்றி பல பேர் நிகழ்வைப் பார்க்கக் கூடியிருந்தனர். ஆடுவதற்கு முன் பயமாக இருந்தது, இருந்தும் ஆசிரியர் தைரியம் தந்து எங்களோடு கூட இருந்தார்" (இனிதா.அ. வயது-13, 15.04.2021). "பயிற்சியின் ஆரம்பத்தில் உடல் வலி அதிகமாக இருந்தது. இதற்கு ஆசிரியர் ஆடுதற்கு முன் சில உடற்பயிற்சிகளை தந்தார். நாட்கள் செல்லச் செல்ல அது இலகுவாக ஆடக்கூடியதாக இருந்தது" (கிரிசா.ம. வயது-13, 15.04.2021). இவ்வாறான சவால்களை மாணவர்கள் முகம் கொடுத்துள்ளமையை அறியமுடிகிறது. இருப்பினும் அவற்றைக் கடந்து ஆற்றுகையை மாணவர்கள் நடாத்தி முடித்திருந்தனர்.

பெற்றோர் சார்பில் காணும்போது தெரிவுசெய்யப்பட்ட மாணவரின் பெற்றோர் ஆற்றுகைக்கு முதலில் அனுமதி தரவில்லை. இதற்கு முக்கியமான காரணம் செலவும், போக்குவரத்தும் என்பதை அனைவரும் முன்வைத்திருந்தனர். இவை இரண்டும் நெறியாளரால் நிவர்த்தி செய்யப்படும் என நிச்சயமாகக் கூறிய பின் தமது சம்மதத்தை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக குறித்த ஆற்றுகை நிகழ்வு சார்ந்த சவால்களை நெறியாளர், ஆற்றுகையாளர், ஆற்றுகையாளரின் பெற்றோர் சார்பில் அவதானிக்க முடிந்தது. சவால்களுக்கு சரியான தீர்வுகளைக் கண்டு நிவர்த்தி செய்து ஆற்றுகை குறித்த தினத்தில் வெற்றிகரமாக செய்து முடிக்கப்பட்டது.

ஆற்றுகையும் பார்ப்போரின் பிற்குறிப்பும்

13.04.2021 அன்று காலை ஆற்றுகை நிறைவடைந்ததன் பின் செய்யப்பட்ட ஆற்றுகைக்கு பாராட்டுகள் பலர் மத்தியிலும் பெற்றமையை காணமுடிந்தது.

இவ்வாறானதொரு ஆற்றுகைக்குரிய அவசியத்தை அங்கு கூடியிருந்தவர்கள் உணர்ந்து கொண்டமையையும் அவதானிக்க முடிந்தது. "பாரம்பரியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் இத்திருத்தலத்தில் நிரந்தரமாக எவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட, விரும்பப்பட்ட இந்நடனம் பேணப்பட்ட வருடாவருடம் ஆட வேண்டும்" (நேரு.சு., வயது-57, 13.04.2021). "பாரம்பரிய மரபிற்கேற்ப இன் நடனம் அமைந்திருந்தது, நடன அம்சங்களுக்கு ஏற்ப பாடல்களும் அமைந்திருந்தது" (கோகிலா.ச. வயது-50,

14.04.2021). இவ்வாறு பார்வையாளர் தம் கருத்துக்களை முன்வைத்திருந்தனர். மேலும் ஆற்றுகையினைப் பாராட்டியும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தது. “ஆசிரியரின் வழிகாட்டல் சரியான முறையில் இருந்தபடியால் யாவரையும் கவரும் வகையில் நடனம் அமைந்திருந்தமை குறிப்பிட வேண்டிய விடயம்” (கோகிலா.ச. வயது-5014.04.2021). மற்றும் கோயில் நிர்வாகக்குழு செயலாளர் அவர்களால் இந்நடனம் பாராட்டப்பட்டதோடு, வருடாவருடம் ஆற்றுகையை நிகழ்த்தவும் தனிப்பட்ட முறையில் பரிந்துரைக்கப்பட்டது.

மாணவரது மனநிலையும் உடல்நிலையும் ஆற்றுகையின் பின் பெரிய வேறுபாட்டை வெளிப்படுத்தியிருந்தது. “ஆசிரியர் படிப்படியாக எல்லா ஆடலையும் சொல்லி தந்திருந்தார். ஆரம்பத்தில் ஆட கஷ்டமாக இருந்தது, இப்போது மிக விரைவில் இலகுவாக ஆட முடிகிறது. எங்களது ஊரார் நிறையபேர் நிகழ்வை பார்க்க வந்திருந்தனர். வீட்டில் வந்து ஊரார்கள் என்னை பாராட்டினர்” (மானிசா.க. வயது-12, 15.05.2021). பார்வையாளரிடமும், ஆற்றுகையாளரிடமும், ஆற்றுகையாளரின் பெற்றோர்களிடமும் இவ்வகையாக மிகுந்த வரவேற்பை குறித்த ஆற்றுகை பெற்றது. ஆற்றுகையின் தெரிவின் போதும், ஆற்றுகையின் பயிற்சியின் போதும் அவர்களிடம் இருந்த மனநிலை ஆற்றுகை நிறைவின் போது வேறுபட்டுக் காணப்பட்டது.

கோணேசர் தலத்திற்கான உருப்படி உருவாக்கம்: ஆற்றுகைப்படுத்துதலின் அவசியம்

திருக்கோணேஸ்வரத்தின் வரலாறுகளின் படி இங்கு ஆடல்கள் ஆடப்பட்டுள்ளமையைக் காணமுடிகிறது. ஆனால் அவை எவ் வகை ஆடல்கள் என சான்றுகளைப் பெற இயலவில்லை. காலத்தின் துரதிஷ்டம் அவை திருகோணமலைச் சமூகத்திடமிருந்து நிரந்தரமாகவே அழிந்துள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட தலத்திற்கான ஆற்றுகை என்பது உருப்படிகளிலேயே தங்கியுள்ளது. உருவாக்கப்பட்ட உருப்படிகளை ஆற்றுகை நிலைக்குக் கொண்டு வருதல் என்பது சாத்தியமானதொன்றாகவே காணப்படுகிறது. இதற்கான ஆற்றுகை என்பது ஆற்றுகைக்குரிய விதிமுறைகள் மாறாமலும், முற்றுமுழுதாக புதுமையை புகுத்தி பழமையை சிதைக்காமலும் இருத்தல் வேண்டும். கையாண்டுள்ள புராணங்கள் மிகத் தொன்மை வாய்ந்தவை; மேற்கொள்ளும் உருப்படி உருவாக்கம் புதிய முயற்சி;

பழமைக்கும் புதுமைக்கும் இடையில் குறிப்பிட்ட ஆற்றுகையை நிலைநிறுத்த வேண்டியது அவசியமாகிறது. இதன் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஆற்றுகை உரியமுறையில் நின்று பழமையை சிதைக்காமலும், புதுமையான முறையிலும் உருவாக்கப்பட்டுள்ளது. உருவாக்கிய உருப்படிகளுக்கு ஆடல்களாக ஆற்றுகை வடிவம் கொடுக்காதுவிடின் அவை வெறும் பாடல்களாகவே காணப்படும். இதனால் இதற்கான

ஆற்றுகை வடிவமும் கொடுக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்ட ஆற்றுகையையும், ஆற்றுகையின் ஆழத்தையும் பிறர் அறியச் செய்வது அவசியமாகும். அதற்காக திருக்கோணேஸ்வரர் ஆலயத்தேர் திருவிழாவில் ஆற்றுகையும் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தலத்திற்கான பாக்களைக் கொண்டு உருப்படிகளை உருவாக்கி, அதே தலத்தில் ஆற்றுகை செய்யும்போது அங்கு பார்வையாளரும் அதனோடு தொடர்புடையவர்களாகக் காணப்படுகின்றனர். பார்வையாளருக்கும் ஆற்றுகைக்கும் இடையே உள்ள தொடர்பு உயிர்புடையதாகக் காணப்படும். பார்வையாளனின் ஒவ்வொரு பார்வையும் வேறுபட்டு இருக்கின்ற போதும், ஆற்றுகையின் கருப்பொருள் பார்வையாளரை சென்றடைதல் என்பது இவ்வாறான ஆற்றுகைகளில் ஒரே விதமானதாகவே காணப்படும். ஞாபகங்களிலும் நிறைந்திருக்கும். கலைஞர் ஒருவர் குறித்த ஆற்றுகையை முழுமையாக விளங்கிக் கொள்ளும் அதேவேளை சாதாரண பார்வையாளர் ஒருவரும் அதே ஆற்றுகை வெளிக்காட்டும் கருவை விளங்கிக் கொள்ளுவது இவ்வாறான ஆற்றுகைகளில் சாத்தியமானதாக அமைகிறது.

குறிப்பிட்ட சமூகத்தை வெளிப்படுத்தியிருக்கும் ஒரு பிரதேச ரீதியான தனித்துவ பாடல்களை புராணங்கள் எடுத்துக் கூறும்போது, அதுசார்ந்து எழும் ஆற்றுகையிலும் இதே அம்சம் வெளிப்பட்டுநிற்கும். இது அப்பிரதேச ரீதியான சான்றுக்குரிய ஆற்றுகையாகவும் காணப்பட வாய்ப்புகள் உண்டு. மேலும் உருவாக்கப்பட்ட ஆற்றுகைகளுக்காக உருவாக்கப்பட்ட உருப்படிகளில் உள்வாங்கப்பட்ட பாக்கள் தமிழ் சார்ந்த பாக்கள் என்பதனால் இதில் தமிழர் செய்யுள்மரபின் தனித்துவம் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

பிறதலங்கள் மேல் அல்லது பிற காரணத்திற்காக எழுந்த உருப்படிகளை ஒரு தலத்தில் நின்று ஆற்றுகை செய்வதிலும் பார்க்க, அத்தலம் பற்றிய சமூக பண்பாட்டு வெளியில் இருக்கும் பாடல்களைக் கொண்டு ஆற்றுகைகள் நிகழ்த்தும்போது சமூகம் சார்ந்த ஆற்றுகையாக அது அமைகிறது. இவ்வாறான ஆற்றுகைகள் ஆற்றுகை செய்வோர் மத்தியில் படைப்பாக்க சிந்தனையையும், புத்துணர்வையும் தூண்டச் செய்கிறது. எனவே தலம் சார்ந்த பாடல்களைக் கொண்டு உருப்படிகளை உருவாக்க முடிவதோடு அவற்றை ஆற்றுகைகளாக்கவும் முடியும். உருவாக்கப்பட்ட

ஆற்றுகைகளை தேவைகளுக்கேற்ப அதே தலத்தில் ஆற்றுகை செய்யவும் முடியும். இது கோணேசர் தலத்திற்கு மட்டுமல்லாது ஏனைய வழிபாட்டுத் தலங்களுக்கும் பொருந்தும். ஒரு சமூகத்திற்குரிய சான்றாக அமைவது சமூக இலக்கியங்களும் கலைகளும் ஆகும். எனவே உரிய தலபுராணப்பாக்களைக் கொண்டு தலங்களுக்கான ஆற்றுகைகளை உருவாக்கி பயன்படுத்த இவ்வாறானதொரு ஆற்றுகை தூண்டுதலாக அமைகிறது.

முடிவுரை

திருக்கோணேஸ்வரர் தலத்திற்கென்ற ஓர் ஆடலை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடும்போது, உருப்படிகளை உருவாக்குதல் என்பது இங்கு முக்கியமானதாகக் காணப்படுகிறது. நூற்றுக்கணக்கான பாடல்கள் வர்ணனைகளோடும், ரசனைகளோடும் ஏற்கனவே புராணங்களாக எழுந்திருக்க, சமகால பாக்களையோ அல்லது புதிதாக இயற்றும் பாக்களையோ அதற்காக பயன்படுத்தவேண்டிய அவசியமில்லை. இதன் விளைவாக புராணப்பாக்களிலிருந்து ஆடல் சார்ந்த உருப்படிகளை உருவாக்க முடிந்தது. திருக்கோணேஸ்வரர் பண்பாட்டை மையப்படுத்திய பாக்களாகவே தலபுராணப் பாடல்கள் காணப்படுகின்றன. இப்பாடல்கள் குறிப்பிட்ட தலம் அமைந்துள்ள சமூக பண்பாட்டுச் சூழல், நில மொழிப்பயன்பாட்டுச் சூழலை வெளிக்காட்டி நிற்கின்றன. இவற்றை உருப்படிகளில் உள்வாங்கும்போது அவை குறிப்பிட்ட பிரதேசத்தின் பண்பாடுகளை உயிர்ப்புடன் வெளிக்காட்டுவதாக அமைகின்றது. இதன் அடிப்படையிலேயே ஆற்றுகைக்குரிய உருப்படி பாக்களும் புராணங்களை சார்ந்து தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட புராணங்களை உருப்படிகளாக்கும்போது, செய்யுள்கள் தமிழிசை மரபு மிக்கதாகக் காணப்படுவதால் அதன் மரபு மாறாமல் பயன்படுத்துவது சிரமமாயினும் கூட்டுச் செயற்பாட்டில் உருப்படிகளை உருவாக்கிக்கொள்ள இயலுகின்றது. பாக்களை உருப்படிகளாக உருமாற்றம் செய்யும்போது செயல்மைய அடிப்படை அறிவை தொடர்ச்சியாக முன்னெடுத்து, இச் செயற்பாட்டில் ஈடுபடுதல் சாத்தியமாயிற்று. இதன் ஆற்றுகையும் அதனால் வெளிப்பட்ட ரச உணர்வுகளும் வித்தியாசமானது. புதிய தலத்துக்கான உருப்படிகள் தனியாகவும், கூட்டாகவும் உருவாக்கப்படுவது அவசியம் என்பதை உணர்த்துகிறது.

துணைநூற்பட்டியல்

1. Vadivelu.E., 1995, Antiquity & Solidity of Thirukoneswaram, Jeyshan Printers, Colombo – 13
2. Pathmanaaban.S., 2006, Sril Lanka Tamil Charters, Uniarts PVT, Colombo – 13
3. Akilesapillai.V. 2000, Festival of Thirukoneswaram, Thathuvagnana Printers, Colombo – 2.
4. Akilesapillai.V. 2000, Festival of Thirukoneswaram, Thathuvagnana thavasaalai Printers, Colombo – 2.
5. Chandrakumar.S. on Elam's Folk Dance Art Study, Karai S.Sundarampillai's theatre folk of Northern Sri Lankan and Prof.S.Maunaguru's Batticaloa Traditional way of drama plays – A Comparative Study, Submitted in 2014 for Master of Philosophy Degree in Department of Fine Arts.